NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 18 April 2019

# அமெரிக்க கலை, அறிவியல் மன்றத்துக்கு கிஷோர் மஹ்புபானி தேர்வு

முன்னாள் அரசதந்திரியும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் மூத்த ஆலோசகரும் பேராசிரியருமான கிஷோர் மஹ்புபானி பிரசித்தி பெற்ற அமெரிக்க கலைகள், அறிவியல் மன்றத்துக்கு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம், அவர் சார்ல்ஸ் டார்வின், பெஞ்சமின் ஃபிராங்கிளின், பராக் ஒபாமா போன்ற பிரபலமானவர்களின் வரிசையில் இடம் பெறுகிறார்.

இதுபற்றிக் கருத்துக்கூறிய கிஷோர் மஹ்புபானி, தமக்கு கிடைத்த இந்த மதிப்புமிக்க கௌரவத்தை தமது பணிக்காலத்தில் தமது தீவிர ஆதரவாளர்களாக இருந்தோரு டன் பகிர்ந்துகொள்வதாகத் தெரிவித்தார்.

திரு மஹ்புபானி, 1993ஆம் ஆண்டிலிருந்து 1998ஆம் ஆண்டு வரை வெளியுறவு அமைச்சின் நிரந்தரச் செயலாளராகப் பணி புரிந்தார். கம்போடியா, மலேசியா, அமெரிக்கா என பல நாடுகளிலும் தூதராகப் பணியாற்றியுள்ளதுடன் ஐநா சபைக்கான தூதராகவும் அதன் பாதுகாப்பு மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.